செய்தி வெளியீடு எண்.22-2016 நாள்: 14.10.2016

# விழுப்புரம் மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக சேவைபுரிந்தவர்கள் மற்றும் சிறந்த நிறுவனங்களுக்கு தமிழக அரசால் மாற்றுத்திறனாளிகள் நல நாள் மாநில விருதுகள் பெற விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப. அவர்கள் அறிவிப்பு.

******

மாற்றுத்திறனாளிகள் நலனுக்காக சிறப்பாக பணி புரிந்தவர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு தமிழக அரசால் விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. அதன்படி 03.12.2016 அன்று நடைபெறவுள்ள மாற்றுத் திறனாளிகள் தின விழாவில், மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத்துறை அமைச்சர் அவர்களால் மாற்றுத் திறனாளிகளுக்கு சிறப்பாக பயிற்றுவித்த ஆசிரியர் விருது, சிறந்த சமூக பணியாளர், மாற்றுத் திறனாளிகளை அதிக அளவில் பணியமாத்திய நிறுவனம், மாற்றுத் திறனாளிகளில் சிறப்பாக பணியாற்றிய பணியாளர் அல்லது சுயதொழில் புரிபவர் மற்றும் மாற்றுத் திறனாளிகளுக்கு அதிக அளவில் பயிற்சி அளித்த நிறுவனம் ஆகியவற்றிற்கு தமிழக அரசின் மாற்றுத் திறனாளிகள் நாள் மாநில விருதுகள் வழங்கப்படவுள்ளது. விழுப்புரம் மாவட்டத்தைச் சார்ந்த மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக பணிபுரிபவர்கள் மற்றும் தனிநபர்கள், www.scd.tn.gov.in என்ற இணையதளத்தில் விண்ணப்பங்கள் பதிவிறக்கம் செய்தோ அல்லது மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், விழுப்புரம் (தொலைபேசி எண். 04146-225543) என்ற முகவரியில் தொடர்பு கொண்டு, விண்ணப்பங்கள் பெற்று, புகைப்படங்கள் மற்றும் சான்றுகளுடன் பூர்த்தி செய்து, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர், விழுப்புரம் அவர்களுக்கு 26.10.2016க்குள் அனுப்பி வைக்க வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.